

தாரகை கல்வி நிலையம்

பல சொற்களுக்கு ஒரு சொல் பிரயோகம்

www.lkedu.lk

தொகுப்பு :-
கு.துவிஷா

பல சொற்களுக்கு ஒரு சொல் பிரயோகம்

பல சொற்களால் கூறப்படும் கருத்தொன்றை ஒரு சொல்லின் மூலம் மாத்திரம் கூறுதல் ஒரு சொல் பிரயோகம் எனப்படும்.

இவை தொடர் மொழிக்கு ஒரு மொழி எனப்படும்.

www.ikeau.lk

தாரகை கல்வி நிலையம்

1. தாய் தந்தையை இழந்தவன் – அனாதை
2. காவல் காப்பவன் - காவற்காரன்
3. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிப்பவன் – அட்டாவதானி
4. விவசாயம் செய்பவன் - கமக்காரன் / விவசாயி
5. வைத்தியம் செய்பவன் - வைத்தியர்
6. தனக்கே சொந்தமாக முழுப் பொருளையும் அனுபவித்தல் – ஏகபோகம்
7. பாட்டுப் பாடுபவன் - பாடகன்நடனம் போன்றவற்றை
8. முதன் முதலில் சபையில் நடித்துக்காட்டுதல் – அரங்கேற்றம்

www.lkedu.lk

தாரகை கல்வி நிலையம்

10. பத்திரிகைக்கு செய்தி சேகரிப்பவன் - நிருபர்

11. நாடகம் , நடனம் என்பவற்றை அரங்கேற்ற முன் சரி, பிழை பார்த்தல் -ஒத்திகை

12. புத்தம் ஒன்றை வாசித்து அதிலுள்ள குறை நிறைகளைப் பற்றிப் பேசுபவர் – விமர்சகர்

13. நம்ப முடியாத கதை – கட்டுக்கதை

14. நாட்டின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் – ஜனாதிபதி

15. மாகாணத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் – ஆளுனர்

16. வைத்தியனின்றித் தானே நோய்க்குச் செய்யும் மருந்து - கைம்மருந்து

17. மாவட்டத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் – மாவட்ட செயலாளர்

18. பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் - பிரதேச செயலாளர்

www.kedu.lk

19. கிராமத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் - கிராம சேவை அதிகாரி
20. இளம் பயிருக்கு நீர் பாய்ச்சுதல் - கண் கழுவுதல்
21. வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் இடம் – நீதி மன்றம்
22. உப்பின்றிச் சமைத்த பச்சையரிசிச் சோறு - அவிசு
23. பல்கலைகளும் பயிலும் உயர்தர மாணவருக்குரிய இடம் – பல்கலைக்கழகம்
24. தானே தன்னைப் பற்றிக் கூறும் சரிதை - சுயசரிதை
25. கடவுள் இல்லையென்ற கொள்கை உடையவன் - நாத்திகன்
26. புகழுடன் இறந்த போர் வீரனுக்காக நாட்டப்படும் கல் - நடுகல்
27. கேட்பவருக்கு இல்லையென்று சொல்லாது கொடுப்பவன் - வள்ளல்
28. பொருட்களைக் கண்டபடி வீணே செலவு செய்பவன் - ஊதாரி

www.tkedu.lk

தாரகை கல்வி நிலையம்

29.பகையரசருக்குக் கொடுக்கப்படும் காணிக்கை - கப்பம்

30. தானும் அனுபவியாது பிறருக்கும் கொடாது சேர்த்து வைப்பவன் - உலோபி / கஞ்சன்

31. நல்ல நேரத்தில் நல்லவர் கையால் காசு வாங்குதல் - கைவிசேடம்

32. உடலைப் பாதுகாக்க அணியும் இரும்பினால் ஆன உடை - கவசம்

33. பொருள் , பண்டம் சேர்த்து வைக்கும் இடம் - பண்டகசாலை / களஞ்சியம்

34. நீரினால் சூழப்பட்டிருக்கும் இடம் - தீவு

35. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கும் விழா - பொன்விழா

36. அரண்மனையில் அரசருக்குரிய பெண்கள் தங்க வைக்கப்பட்ட இடம் - அந்தப்புரம்

www.ikedu.lk

37. பழைய பொருட்களின் காட்சிகூடம் - நூதனசாலை / அரும்பொருட்சாலை / அருங்காட்சியகம்

38. வீட்டிற்குப் புதியதாய் வருபவர் - விருந்தாளி / விருந்தினர்

39. அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கும் விழா - வைர விழா / மணி விழா

40. வயலில் சூடு மித்திக்கும் இடம் - பொலி

41. வயலில் சூடு மிதிக்கும் இடத்தில் உள்ள எருதுகள் - பொலி எருது / பொலி நடையன்

42. ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன் - சதாவதானி

www.ikedu.lk

தாரகை கல்வி நிலையம்

43. விகடமாகவும் பரிகாசமாகவும் பாடுவோன் - விகடகவி

44. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன் - அட்டாவதானி

45. பகைமேற் சென்றோருக்கான உறைவிடம் - பாசறை

46. ஆறுகள் அனைத்தும் சென்றடையும் இடம் - கடல்

47. முனிவர்கள் தங்கும் இலை , குழைகளால் வேயப்பட்ட குடிசை - பன்னசாலை

48. ஆகாயமும் கடலும் ஒன்றை ஒன்று தொடுவதாகத் தோன்றும் கோடு - அடிவானம்

www.lkedu.lk

49. எழுபைத்தைந்தாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா - பவளவிழா

50. எண்பதாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா - அமுத விழா

51. நூறாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா - நூற்றாண்டு விழா

52. கடவுள் உண்டு என வாதிடுபவன் - ஆத்திகன்

53. வாசிப்பதற்கென புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடம் - நூலகம்

54. சிறுவர்களைப் பராமரிக்கும் நிலையம் - சிறுவர் இல்லம்

www.lkedu.lk